


# கிறிஸ்துவ வாழ்வு பணிக்குழு

திருச்சி

மின்னிதழ் ஏப்ரல் 2025






## செயலர் பக்கம்




அருள்பணி, சு. மரிய சூசை


இயேசுவின் வாழ்வில் அவருடைய பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவை மிகவும் வாய்ந்தவை. இதையே கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் என்று கூறுகிறோம். நாற்பது நாள்கள் நீடிக்கும் தவக்காலத்தின் இறுதி மூன்று நாள்களில் நாம் கொண்டாடுவதும் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளையே. கடவுள் நமக்காக மனிதராகப் பிறந்தார். அவர் நமக்காகவே இறந்தார். இறந்த அவர் மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்து நமக்கும் உயிர்ப்பு உண்டு என்னும் உண்மையை உணர்த்தினார்.

இயேசுவைப் போலவே நாமும் உயிர்ப்பதையே இயேசு விரும்புகிறார். பாவத்திலிருந்து புனிதத்திற்கு, குறைவிலிருந்து நிறைவுக்கு, பொய்மையிலிருந்து உண்மைக்கு, இருளிலிருந்து ஒளிக்கு, சாவிலிருந்து வாழ்வுக்கு நாமும் உயிர்க்க வேண்டும். நாம் உயிர்த்த இயேசுவின்மீது நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவர்கள். ஆகவே, இயேசுவின்மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையானது, நம்மையும் நம் வாழ்வில் உயிர்ப்புள்ள கிறிஸ்தவர்களாக்கிட வேண்டும்.

இயேசுவோடு உயிர்க்கிற ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையையே இவ்வுலகுக்கான நற்செய்தியாக்குகிறார்கள். விவிலியத்தின் நான்கு நற்செய்தி நூல்களைத் தாண்டி, நம்முடைய வாழ்வும் நடமாடும் ஐந்தாவது நற்செய்தியே என்பதைப் புரிந்தவர்களாய், நாமும் இயேசுவோடு உயிர்ப்போம்.

**இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துகள்!**



# யூபிலி ஆண்டு அறிவோம்



## திருஅவையில் யூபிலி ஆண்டு உருவான வரலாறு




முதன்முதலாக திருத்தந்தை 8-ஆம் போனிப்பாசு 1300 ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாக அறிவித்து, அதன்பின் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை யூபிலி ஆண்டு கொண்டாடப்படும் என்று வெளியிட்டார்.மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப கால இடைவெளியை 50 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்றும் அதன்பின்னர் 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்றும் யூபிலி ஆண்டு கொண்டாடப்படுகிறது.காலத்தின் தேவைக்கேற்ப திருத்தந்தையர் சிறப்பு யூபிலி ஆண்டையும் அறிவிக்கிறார்கள்.(எ. கா.) 2015-2016 ஆம் ஆண்டை "இறை இரக்கத்தின் ஆண்டு" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். குறிக்கப்பட்ட ஆண்டில் நிகழ்ந்தால் "சாதாரண யூபிலி" என்றும் ஏதேனும் சிறப்பு நிகழ்வுக்காக அறிவிக்கப்பட்டால் அதை "சிறப்பு யூபிலி" என்றும் கூறுகிறார்கள்.

### 20ஆம் நூற்றாண்டில் ...

| ஆண்டு | திருத்தந்தை | மையக் கருத்து | ஆணை அறிவித்த நாள் |
|---|---|---|---|
| **சாதாரண யூபிலிகள்** | | | |
| 1900 |  13 ஆம் லியோ | "கத்தோலிக்க நம்பிக்கையில் மறுமலர்ச்சி" | 11-05-1899 |
| 1925 |  11 ஆம் பயஸ் | "திரு அவையின் திருத்தூதுப் பணிகளை கண்ணோக்கல் & உலக அமைதிக்காக செபித்தல்" | 29-05-1924 |
| 1950 |  12 ஆம் பயஸ் | "உலகளாவிய நல்லிணக்கம் & அமைதியை மேம்படுத்துதல்" | 26-05-1949 |
| 1975 |  6 ஆம் பால் | "புதுப்பித்தல் & நல்லிணக்கம்" | 23-05-1974 |
| **சிறப்பு யூபிலிகள்** | | | |
| 1933 |  11 ஆம் பயஸ் | "இயேசுவின் இறப்பின் 1900வது நினைவு" | 06-01-1933 |
| 1983 |  2ஆம் ஜான் பால் | "இயேசு இறந்து உயிர்த்தெழுந்த 1950 வது வருட நினைவு" | 06-01-1983 |





## பள்ளி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஆண்டு தியானம் - திருச்சி

நம் மறைமாவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்கப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆண்டு தியானம் திருச்சி புனித மரியன்னை பேராலயத்தில் இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது. 08.03.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற தொடக்க, நடுநிலை, ஆங்கில வழி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான தியானத்தை கீரனூர், புனித ஆரோக்கிய அன்னை மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் அருள்பணி. லியோ மெல்கியூர் பாபு சிறப்பாக வழிநடத்தினார். இத்தியானத்தில் 53 பள்ளிகளிலிருந்து 592 ஆசிரியர்கள் பங்கேற்று பயனடைந்தனர். 15.03.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான தியானத்தை திருச்சி, அருங்கொடை இல்லத்தின் இயக்குநர் அருள்பணி.அமல்ராஜ் சிறப்பாக வழிநடத்தினார். இத்தியானத்தில் 30 பள்ளிகளில் இருந்து 320 ஆசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.









## விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறை – மணப்பாறை

ஒவ்வோர் ஆண்டும் நம் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவால் நடத்தப்படும் **VBS** ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை இவ்வாண்டும் 'மகிழ்வோம் புகழ்வோம்' என்னும் மையக்கருத்தில் நடத்தப்பட்டது. மணப்பாறை, புனித லூர்தன்னை ஆலயத்தில் 16.03.2025 ஞாயிறு அன்று நடைபெற்ற பயிற்சியில் மணப்பாறை மறைவட்டத்தைச் சேர்ந்த 17 பங்குகளிலிருந்து 61 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பங்கேற்பாளர்கள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனி குழுக்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியினை மறைமாவட்ட வேதியர்களும் தன்னார்வ வேதியர்களும் செயலருடன் இணைந்து ஒருங்கமைவு செய்திருந்தனர்.





V B S









பயிற்சியின் சிறப்பு அம்சங்களாக இவ்வாண்டுக்கான புதிய பாடத்திட்டம், விவிலிய விளையாட்டுகள், பாடல்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. பங்கேற்ற அனைத்துப் பங்குகளுக்கும் பாட ஏடுகள், பயிற்சிஏடுகள், அருளாளர் கார்லோ அக்குதிஸ் வரலாறு, பாடல் தாள்கள், பேட்ஜ் ஆகிய துணைக்கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

# விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறை - திருச்சி

30.03.2025 ஞாயிறு அன்று திருச்சி, நல்லாயன் நிலையத்தில் நடைபெற்ற விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் பொன்மலை, கிராப்பட்டி, புத்தூர், கீரனூர் ஆகிய நான்கு மறைவட்டங்களைச் சேர்ந்த 42 பங்குகளிலிருந்து 172 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இப்பயிற்சியினை மறைமாவட் தன்னார்வ வேதியர்கள் செயலருடன் இணைந்து ஒருங்கமைவு செய்திருந்தனர்.

















# VBS - TRICHY















# யூபிலி ஆண்டு திருப்பயணம்

09.03.2025 ஞாயிறு அன்று கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவின் தன்னார்வ வேதியர்கள், துறவற தன்னார்வலர்கள் ஆகியோர் செயலர் தந்தையுடன் இணைந்து யூபிலி ஆண்டு சிறப்புத் திருப்பயணம் மேற்கொண்டனர். இடைக்காட்டூர், சிவகங்கை,வல்லனி, சருகணி, ஓரியூர் ஆகிய இடங்களில் உள்ள திருத்தலங்களைச் சந்தித்து நிறைபேறு பலன்களுக்காக செபித்தனர்.







திரு இருதயங்களின் ஆலயம்






ENTRY
EXIT
Reception
F.KANAGARAJ
&
SHYAMALA




இடம்:
**கிராப்பட்டி**
-திருச்சி

# ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழா

23.03.2025 ஞாயிறு அன்று மாலை கிராப்பட்டி, புனித குழந்தை தெரசாள் ஆலயப் பங்கின் ஞாயிறு மறைக்கல்வி ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் செயலர் பங்கேற்று ஆசிரியர்களையும் மாணாக்கரையும் வாழ்த்தினார்.















# ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழா

**இடம்: மேலப்புதூர் -திருச்சி**

31.03.2025 திங்கள் அன்று மாலை மேலப்புதூர், புனித மரியன்னை பேராலயப் பங்கின் ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் செயலர் பங்கேற்று ஆசிரியர்களையும் மாணாக்கரையும் வாழ்த்தினார்.

















இரண்டு படங்களுக்கு
இடையே உள்ள
10 வித்தியாசங்களைக்
கண்டுபிடித்து மகிழுங்கள்



